உ

திருச்சிற்றம்பலம்.

சிதம்பரம்.

# திருவருட்பிரகாச வள்ளலாரென்னும்
# இராமலிங்கப்பிள்ளை
# திருவாய்மலர்ந்தருளிய
# திருவருட்பா.

இஃது

சிதம்பரம்.

பு. வே. சுந்தரம்பிள்ளை கேட்டுக்கொண்டபடி

இவை

சரவணபுரம்

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு

புரசைபாக்கம்.

எழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப் பட்டது.

விக்குருதி௵.

மூன்றாம் புத்தகம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவருட்பா.

அருட்சோதித்தெய்வமெனையாண்டுகொண்டதெய்வம்
அம்பலத்தேயாடுகின்றஆனந்தத்தெய்வம்
பொருட்சாருமறைகளெலாம் போற்றுகின்றதெய்வம்
போதாந்ததெய்வமுயர்நாதாந்தத்தெய்வம்
இருட்பாடுநீக்கியொளிர்யீந்தருளுந்தெய்வம்
எண்ணியநானெண்ணியவெனக்கருளுநதெய்வம்
தெருட்பாடலுவந்தெனையுஞ்சிவமாக்குநதெய்வம்
சிற்சபையில்விளங்குகின்றதெய்வமதே.தெய்வம்

எல்லாஞ்செய்வல்லதெய்வமெங்குநிறைந்ததெய்வம்
என்னுயிருக்கலந்ததெனக்கேவின்ப நல்குந்தெய்வம்
நல்லார்க்குநல்லதெய்வம்நடுவானதெய்வம்
நற்சபையிலாடுகின்றநடராஜதெய்வம்
கல்லார்க்குங்கற்றவர்க்குங்களிப்பருளுந்தெய்வம்
காரணமார்தெய்வமருட்பூரணமாந்தெய்வம்
செல்லாதநிலைகளெல்லாஞ்செல்லுகின்றதெய்வம்
சிற்சபையில்விளங்குகின்றதெய்வமதேதெய்வம்

தாயாகித்தந்தையுமாய்த்தாங்குகின்றதெய்வம்
தன்னைநிகரில்லாததனித்தலைமைத்தெய்வம்
வாயாரவாழ்த்துகின்றோர்மனந்தமர்ந்ததெய்வம்
மலரடியென்சென்னிமிசைவைத்தபெருந்தெய்வம்
காயாதகனியாகிக்கலந்தினிக்குந்தெய்வம்
கருணைநிதித்தெய்வமுற்றுங் காட்டுவிக்குந்தெய்வம்
சேயாகவெனைவளர்க்குந்தெய்வமகாதெய்வம்
சிற்சபையில்விளங்குகின்றதெய்வமதேதெய்வம்

என்னிதயகமலத்தேயிருந்தருளுந்தெய்வம்
என்னிரண்டுகண்மணிக்குளிலங்குகின்றதெய்வம்
பொன்னடியென்சென்னியிலேபொருந்தவைத்ததெய்
வம், பொய்யாததெய்வமிடர் செய்யாததெய்வம்
அன்னியமல்லாத்தெய்வமறிவானதெய்வம்
அவ்வறிவுக்கறியாமென்னன்பானதெய்வம்
சென்னிலையிற்செம்பொருளாய்த் திகழ்கின்றதெய்வம்
சிற்சபையில்விளங்குகின்றதெய்வமதேதெய்வம்

எண்ணியவாவிளையாடென்றெனையளித்ததெய்வம்
எல்லாஞ்செய்வல்லசித்தெனக்கீந்ததெய்வம்
நண்ணியபொன்னம்பலத்தேநடம்புரியுந்தெய்வம்
நானாகித்தானாகிநண்ணுகின்றதெய்வம்
பண்ணியவென்பூசையிலேபலித்தபெருந்தெய்வம்
பாடுகின்றமறைமுடியிலாடுகின்றதெய்வம்

திண்ணியனென்றெனையுலகஞ் செப்பவைத்ததெய்வம்
சிற்சபையில்விளங்குகின்ற தெய்வமதேதெய்வம்

இச்சையெலாமெனக்களித்தேஎனைக்கலந்ததெய்வம்
இறந்தவர்களனைவரையுமெழுப்புகின்றதெய்வம்
எச்சமயத்தெய்வமுந்தானெனநிறைந்ததெய்வம்
எல்லாஞ்செய்வல்லதெய்வ மெனதுகுலதெய்வம்
விச்சகற்றும்பெருந்தெய்வம்சிவகாமியெனுமோர்
பெண்கொண்டதெய்வமெங்குங்கண்கண்டதெய்வம்
செச்சைமலரெனவிளங்குந்திருமேனித்தெய்வம்
சிற்சபையில்விளங்குகின்றதெய்வமதேதெய்வம்

சாகாதவரமெனக்கேதந்தளித்ததெய்வம்
சன்மார்க்கசபையிலெனைத் தனிக்கவைத்ததெய்வம்
மாகாதவரமெனக்குவாய்த்தவொருதெய்வம்
மாதவராதியரெல்லாம்வாழ்த்துகின்றதெய்வம்
ஏகாதநிலையதன்மேலெனையேற்றுந்தெய்வம்
எண்ணுதொருமென்னுளத்தேயினிக்கின்றதெய்வம்
தேகாதியுலகமெலாஞ்செயப்பணித்ததெய்வம்
சிற்சபையில்விளங்குகின்றதெய்வமதேதெய்வம்

தூண்டாதமெய்விளக்காய்த்துலங்குகின்றதெய்வம்
துரியதெய்வமரியதெய்வம்பெரியபெருந்தெய்வம்
மாண்டாரைஎழுப்புகின்றமருந்தானதெய்வம்
மாணிக்கவல்லியையோர்வலத்தில்வைத்ததெவய்ம்

ஆண்டாரையாண்டதெய்வமருட்சோதித்தெய்வம்
ஆகமவேதாதியெலாமறிவரிதாந்தெய்வம்
தீண்டாதவெளியிலவர்தீண்டாததெய்வம்
சிற்சபையில்விளங்குகின்றதெய்வமதேதெய்வம்

எவ்வகைத்தான்றவஞ்செயினுமெய்தரிதாந்தெய்வம்
எனக்கெளிதிற்கிடைத்தென்மன மிடங்கொண்டதெய்
அவ்வகைத்தான்றெய்வமதற்கப்பாலாந்தெய்வம்
அப்பாலும்பெருவெளிக்கேயப்பாலாந்தெய்வம்
ஒவ்வகைத்தேயொளியாகியோங்குகின்றதெய்வம்
ஒன்றானதெய்வமிகநன்றானதெய்வம்
செவ்வகைத்தென்றறிஞரெலாஞ்சேர்பெரியதெய்வம்
சிற்சபையில்விளங்குகின்றதெய்வமதேதெய்வம்

சத்தியமாந்தனித்தெய்வந்தடையறியாத்தெய்வம்
சத்திகளெலாம்விளங்கத்தானோங்குதெய்வம்
நித்தியதன்மயமாகிநின்றதெய்வமெல்லா
நிலைகளுந்தன்னருள்வெளியில் நிலைக்கவைத்ததெய்வம்
பத்திவலைப்படுகின்றதெய்வமெனக்கெல்லாம்
பரிசுமளித்தழியாதபதத்தில்வைத்ததெய்வம்
சித்தியெலாந்தருந்தெய்வஞ்சித்தாந்ததெய்வம்
சிற்சபையில்விளங்குகின்றதெய்வமதேதெய்வம்

ஆக-பாடல்-௰.

திருவருட்பாசுரங்கள்

முற்றிற்று.

உ

# ஆ ந ந் த க் க ளி ப் பு.

சோதியுட்சோதியுட்சோதி சுத்த
சோதிவச்சோதி சோதியுட்சோதி
சோதியுட்சோதியுட் சோதி

சிவமேபொருளென்றதேற்றி என்னைச்
சிவவெளிக்கேனுஞ்சிகரத்திலேற்றிச்
சிவமாக்கிக்கொண்டதுபாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௧)

வித்தெல்லாமென்றென்றுநாட்டி அதில்
விளைவுபலபலவேறென்றுகாட்டிச்
சித்தெல்லாந்தந்ததுபாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௨)

சொலவந்தவந்தங்களாறும் ஒரு
சொல்லாலேயாமென்ற சொல்லாலேவீறும்
செல்வங்கொடுத்ததுபாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௩)

தக்கோலளவெனக்கோதி சுத்த
சமரசசத்தியசன்மார்க்கநீதி
செங்கோலளித்ததுபாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௪)

ஆபத்தைநீக்கிவளர்த்தே சற்றும்
அசையாமலவியாமலடியேனுளத்தே

நிபத்தைநவைத்தது பாரீர் திருச்
சிற்றம்பலத்தே திருநடச்சோதி சோதி (௫)

மெய்யென்றுசன்மார்க்கமேதான் என்றும்
விளங்கப்படைப்பாதிமெய்த்தொழில்நீதான்
செய்யென்றுவந்தது பாரீர் திருச்
சிற்றம்பலத்தே திருநடச்சோதி சோதி (௬)

என்பால்வருபவர்க்கின்றே அருள்
ஈகின்றேனீகின்றேனீகின்றேனென்றே
தென்பாலிருந்தது பாரீர் திருச்
சிற்றம்பலத்தே திருநடச்சோதி சோதி (எ)

துரியத்தலமூன்றின்மேலே சுத்த
துரியப்பதியிலதுவதனாலே
தெரியந்தெரிவது பாரீர் திருச்
சிற்றம்பலத்தே திருநடச்சோதி சோதி (அ)

பனைதூக்கிக்காட்டியகாலே ஆதி
பனையிவர்க்கப்பாலப்பாலென்றுமேலே
தினைதூக்கிக்காட்டுதல்பாரீர் திருச்
சிற்றம்பலத்தே திருநடச்சோதி சோதி (௯)

தற்பரமேவடிவாகி அது
தன்னைக்கடந்துதனியுருவாகிச்
சிதம்பரத்துள்ளது பாரீர் திருச்
சிற்றம்பலத்தே திருநடச்சோதி சோதி (௰)

நவவெளிநால்வகையாதி ஒரு
நடுவெளிக்குள்ளேநடத்தியநீதிச்
சிவவெளியாமிதுபாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௰௧)

மேருவெற்புச்சியின்பாலே நின்று
விளங்குமோர்தம்பத்தின்மேலுக்குமேலே
சேருமோர்மேடைமேற்பாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௰௨)

ஆரணவீதிக்கடையும் சுத்த
ஆகமவீதிகளந்தகடையுஞ்
சேரநடுக்கடைபாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௰௩)

பாடன்மறைகளோர்கோடி அருட்
பாதவுருவசொரூபங்கள்பாடி
தேடவிருந்ததுபாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௰௪)

நீடுசிவாகமங்கோடி அருள்
நேருறப்பாடியுமாடியுமோடித்
தேடவிருந்ததுபாரீர் திருச்
சிற்றம்பலத்தேதிருநடச்சோதி சோதி (௰௫)

ஆனந்தக்களிப்பு
முற்றிற்று.